## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.30** **நாள்: 09.02.2025**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வெங்கடாபுரம், பள்ளிக்கூட சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.40.3 இலட்சம் மதிப்பில் பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் உடற்பயிற்சி கூடத்தினை இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வெங்கடாபுரம், பள்ளிக்கூட சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.18.86 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தினை இன்று (09.02.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தொடர்ந்து வெங்கடாபுரம், பள்ளிக்கூட சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.21.14 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தினையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. கே. ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., நிலை குழு தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவர் திரு. பி.கே. மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.ஈ. சேகர், திரு. ம. கமல், திரு.டி.எஸ்.பி. இராஜகோபால், திருமதி. க.வி. நாகவள்ளி, திருமதி. க. பொற்கொடி, திருமதி. சா. உமா, டாக்டர் பூர்ணிமா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**